The management declared the lock-out on 25—1—1973 அந்தத் தேதியிலிருந்து லாக்-அவுட் நடந்து இருக்கிறது. மதிப்பிற்குரிய அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களிடத்தில் அந்தத் தொழிலாளர்கள் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் வந்த நேரத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் இல்லை என்ற காரணத்தால் அந்த அமைச்சரிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். சிம்சன் கன்சர்னில் உள்ள தகராறும் இன்னும் முடிவாக வில்லை. இது குறித்து ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அங்கே 180 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அடிக்கடி முதலமைச்சர் அவர்கள் மேனேஜ்மெண்டிற்குச் சொல்கிறேன். என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இருப்பினும் இந்த சிம்சன், அடிசன் கம்பெனி பிரச்சினை தீர்ந்தபாடில்லை. இதனால் நாளைய தினம் ஒரு பெரிய பயங்கரமான நிலைமை, தொழிலாள தோழர்களின் ஒரு பெரிய ஊர்வலம் நடத்தும் நிலைமை ஏற்படலாம். ஆகவே, முன்கூட்டியே அமைச்சர் அவர்களும், அந்த இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்து, அந்த லாக்-அவுட்டை விரைவிலேயே லிப்ட் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன் காரணமாக, நாளையதினம் தொழிலாளர்கள் மனதில் ஏற்படும் வருத்தத்தையும் கவலையையும் நிச்சயமாக நாம் குறைக்கலாம். ஆகவே, இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்கவும், என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதைப் பற்றி விளக்கவும், இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு என். வி. நடராசன்: தலைவரவர்களே, சென்னை அடிசன் கம்பெனி லிமிடெட் தொழிற்சாலையில் சுமார் 1,650 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இந்தத் தொழிற்சாலையில் இரும்பு வார்ப்புகளும் பொறியியல் தொழிலுக்கு வேண்டிய வெட்டும் கருவிகளும் தயாரிக்கப்படுகின்றன. இத்தொழிற்சாலையில் மூன்று அங்கிகாரம் பெற்ற தொழிற்சங்கங்கள் இருக்கின்றன.

1. தமிழ்நாடு நேஷனல் இன்ஜினீயரிங் எம்ப்ளாயீஸ் யூனியன், சென்னை-14.

2. சிம்சன் அண்ட் குருப் கம்பெனிஸ் ஒர்க்கர்ஸ், யூனியன் சென்னை-2.

3. சிம்சன் அண்ட் குரூப் கம்பெனிஸ் ஸ்டாப் யூனியன், சென்னை-2

தமிழ்நாடு நேஷனல் இன்ஜினீயரிங் எம்ப்ளாயீஸ் யூனியன் தொழில் துறையில் ஒழுங்கு முறை விதிகள் அடிப்படையின்படி 15–2–1972 முதல் நிர்வாகத்தினரால் அங்கீகாரம் பெற்றதிலிருந்து இன்னும் இரண்டாண்டு காலம் முடிவடைய வில்லை. சிம்சன் குரூப் கம்பெனி தொழிலாளர்கள் சங்கம் மற்றும் சிம்சன் குரூப் கம்பெனிஸ் ஸ்டாப் யூனியன் ஆகிய இரண்டு சங்கங்கள் அங்கீகாரம் கேட்டு கோரிக்கை எழுப்பியுள்ளது. மேலும் 1,000 தொழிலாளர்களிடமிருந்து அவர்கள் இச்சங்கங்களைச் சேர்ந்தவர்கள்